# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.2-)**

**அசல் வழக்கு எண். 83/2020**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பிச்சையா | தாலூக்கா | கோவை |
| தந்தை பெயர் | சுப்ரமணியம் | கிராமம் | கோவை |
| பணி | கட்டிட பொறியாளர் / மதிப்பீட்டாளர் | மதம் | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 21.11.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் கோவை மாவட்டத்தில் கட்டிட பொறியாளர் மற்றும் மதிப்பீட்டாளராக பணியாற்றி வருகிறேன். நான் MS. Civil Engineering படித்துள்ளேன். நான் 49 வருடங்களாக சிவில் இன்ஜினியரிங் தொழில் செய்து வருகிறேன். எனக்கு SOLID BLOCK தயாரிப்பு விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். SOLID BLOCK தயாரிக்க 1. சிமெண்ட், 2. பேபி ஜல்லி, 3. மணல் அல்லது M-SAND மற்றும் தண்ணீர் வேண்டும். தற்போது கிரஷரில் உற்பத்தி செய்யப்படும் M-SAND யை பயன்படுத்துகிறோம் என்றால் சரிதான்.

2. M-SAND யை தண்ணீரில் கழுவி அதன் துகள்கள் மட்டும் ஈரப்பதத்துடன் வரும் என்றால் சரிதான். M-SAND, சிமெண்ட், பேபி ஜல்லி, மற்றும் தண்ணீர் கலந்து கலவை மெஷினில் கலந்து Mould ல் ஊற்றி அழுத்தம் கொடுத்து Solid Block தயாரிக்கப்படும். மேற்படி தயாரிப்பிற்கு WET PROCESS என்று பெயர் என்றால் சரிதான். WET PROCESS ல் தூசிகள் வருமா என்றால் இயல்பான நடைமுறையில் தூசிகள் வராது, ஆனால் தவறுகள் நடந்தால் தூசிகள் வரும். WET PROCESS மூலமாக Solid Block தயாரிக்கும்போது சத்தம் ஏற்படுமா என்றால் 55 - 65 டெசிபெல் சத்தம் வரும், அது அனுமதிக்கப்பட்ட அளவு சத்தம் ஆகும். WET PROCESS மூலமாக Solid Block தயாரித்த பின்னிட்டு Moulding ல் இருந்து வெளியே எடுத்து 15 நாட்கள் தண்ணீர் ஊற்றுவார்கள். அதன் பின்பு 5 நாட்கள் நன்கு

காய வைத்த பின்னிட்டு சயிட்டிற்கு டெலிவரி அனுப்பப்படும் என்றால் சரிதான்.

3. கொரோனா காலகட்டத்தில் இருந்து மணல் தட்டுப்பாடு காரணமாக தமிழ்நாடு முழுவதும் M-Sand மணலுக்கு மாற்றாக கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். M-SAND, சிமெண்ட், மற்றும் தண்ணீர் கலக்கும்போது ஏதேனும் உடல்நலக்குறைவு பிரச்சனை ஏற்படுமா என்றால் அனுபவ ரீதியாக எவ்வித உடல்நல பிரச்சனையும் ஏற்பட்டதில்லை. நான் வாதியின் SMS HOLLOW BLOCK UNIT யை பார்த்துள்ளேன். அந்த யூனிட்டில் மூன்றுபுறமும் வடபுறமும், தென்புறமும், கிழபுறமும் 8 அடி உயரத்தில் சுற்றுச்சுவர் உள்ளது. மேற்குபுறத்தில் மட்டும் சிமெண்டையை அடைக்க ஒரு அறை உள்ளது என்றால் சரிதான்.

4. SMS HOLLOW BLOCK யை பார்க்கும்போது தரை முழுவதும் தடம் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். HOLLOW BLOCK தயாரிப்பது Cottage industry(சிறுதொழில்) இன் கீழ் வரும் என்றால் சரிதான். Solid Block ஆனது Wet Process ல தயாரிக்கும்போது அந்த WET PROCESS க்கு தேவையான கருங்கல் துகள்கள் ஈரப்பதத்துடன் இருக்கும் காரணத்தால் காற்றில் பறப்பதற்கான வாய்ப்பு இல்லை. Wet Process மூலம் Solid Block தயாரிக்கும்போது கான்கீரிட் கலவை இயந்திரம் ஈரப்பதத்தில் இருப்பதால் அதில் இருந்து எவ்விதமான துகள்கள் வருமா என்றால் வராது.

5. கலவை மெஷினில் பேபி ஜல்லி தயாரிக்கும்போது அதனுடைய துகள்கள் தனியாக பிரிக்கப்பட்டு ஜல்லி மட்டும் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் என்றால் சரிதான்.

**1,2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

குறுக்குவிசாரணைக்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct
Sd./M.Santhosham
District Munsif, Sulur